வணிகவரி மற்றும் பதிவுத் துறை

மானியக் கோரிக்கை எண். 10
வணிகவரிகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு
2015–2016

எம் சி சம்பத்
வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு
2015

# பொருளடக்கம்


| வரிசை எண். | | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|---|
| 1. | | முன்னுரை | 1 |
| 2. | | நிர்வாக அமைப்பு | 2 |
| | 2.1 | வரிவிதிப்புப் பிரிவு | 3–4 |
| | 2.2 | தணிக்கைப் பிரிவு | 4 |
| | 2.2.1 | உள் தணிக்கை | 4–5 |
| | 2.2.2 | மாநிலக் கணக்காயரின் தணிக்கை | 6–7 |
| | 2.3 | மேல்முறையீட்டு பிரிவு | 7 |
| | 2.3.1 | முதல் மேல்முறையீடு | 7 |
| | 2.3.2 | தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் | 7–8 |
| | 2.3.2.1 | விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கான வசதிகள் | 9 |
| | 2.3.3 | உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வரி வழக்குகள் | 9–10 |
| | 2.4 | செயலாக்கப் பிரிவு | 10 |
| | 2.4.1 | செயலாக்கப் பிரிவு கோட்டங்கள் | 10–12 |

| | | | |
|---|---|---|---|
| | 2.4.2 | மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுப் பிரிவு (Inter State Investigation Cell) | 12–13 |
| | 2.4.3 | வர்த்தகப் புலனாய்வு அலகு (Business Intelligence Unit) | 13 |
| | 2.4.3.1 | மாநில வர்த்தகப் புலனாய்வு அலகு (State Business Intelligence Unit) | 13–14 |
| | 2.4.3.2 | கோட்ட வர்த்தகப் புலனாய்வு அலகு (Divisional Business Intelligence Unit) | 14 |
| 3. | | புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு (Statistics and Research Cell) | 14–15 |
| 4. | | வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் | 16–17 |
| | 4.1. | வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்திற்கான வசதிகள் | 17–18 |
| 5. | | துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 18–19 |
| 6. | | வருவாய் வசூலின் போக்கு | 19 |
| 7. | | கடந்த ஐந்தாண்டுகளில் சட்டங்கள் வாரியான வருவாய் | 20 |
| 8. | | வரிநிர்வாகம் | 20–21 |
| 9. | | வரி ஏய்ப்பு குறித்த தகவல் அளிப்போருக்கு பரிசளிப்புத் தொகையை அதிகப்படுத்துதல் | 21 |

| | | | |
|---|---|---|---|
| 10. | | மாநில மொத்த உற்பத்தி விகிதத்துடன் வரிவருவாய் ஒப்பீடு (Gross State Domestic Product Ratio) | 22 |
| 11. | | வரி சீரமைப்பு | 23 |
| | 11.1 | வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதுவதற்கு வழிவகை செய்தல் | 23 |
| | 11.2 | தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பு | 23 |
| | 11.3 | பதிவு பெற்ற சிறு வணிகர்களுக்கான உள்ளீட்டு வரி வரவு (Input Tax Credit) | 24 |
| | 11.4 | இணக்கவரி (Compounding Tax) செலுத்தும் முறையில் மாற்றம் | 24 |
| | 11.5 | மாநிலங்களுக்கு இடையே நடைபெறும் பொருள் விற்பனைகளில் 'சி' படிவமின்றி நடைபெறும் விற்பனைகளுக்கும் உள்ளீட்டு வரி வரவு வைத்தல் (Input Tax Credit (ITC) on inter-State sale of goods without "C" Forms) | 25 |
| 12. | | தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வரி விலக்குகள் / குறைப்புகள் / தள்ளுபடி | 25 |

| | | | |
|---|---|---|---|
| | 12.1 | வரி விலக்குகள் / குறைப்புகள் | 25–27 |
| | 12.2 | வரித் தள்ளுபடி (Waiver) | 27 |
| | 12.2.1 | நெசவாளர் நலன் | 27 |
| | 12.2.2 | மக்கள் நல்வாழ்வு | 28 |
| | 12.2.3 | தொழில் துறை | 28 |
| 13. | | 1981–ஆம் ஆண்டைய ஆடம்பர வரிச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட வரிவிலக்கு | 28 |
| 14. | | நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்கள் | 29 |
| 15. | | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (Goods and Services Tax) | 29–30 |
| | 15.1 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான தமிழக அரசின் நிலைப்பாடு | 30–31 |
| 16. | | வணிகர் நலன் | 31 |
| | 16.1 | வணிகர் நல வாரியம் | 31 |
| | 16.1.1 | செயல்பாடு | 31 |
| | 16.1.2 | உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் | 31–32 |
| | 16.1.3 | நலத்திட்ட உதவிகள் | 32 |
| | 16.2 | வணிகர்களின் குறை தீர்க்கும் நாள் | 32–33 |
| 17. | | மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிக்கான வருவாய் இழப்பீடு | 33 |
| | 17.1 | மதிப்புக் கூட்டு வரி இழப்பீடு | 33 |
| | 17.2 | மத்திய விற்பனை வரி இழப்பீடு | 33–34 |

| | | | |
|---|---|---|---|
| 18. | | கணினிமயமாக்கல் | 34 |
| | 18.1 | துறையின் கணினிமயமாக்கல் | 34–35 |
| | 18.2 | மின்னணு சேவைகள் (Electronic Services) | 36 |
| | 18.2.1 | வணிகர்களுக்கு வழங்கப்படும் மின்னணு சேவைகள் (Electronic Services Provided to Dealers) | 36 |
| | 18.2.1.1 | வணிகர்களின் பதிவு (Registration of Dealers) | 36 |
| | 18.2.1.2 | மின்னணு முறையில் நமூனாக்கள் தாக்கல் செய்தல் (e-filing of Returns) | 36–37 |
| | 18.2.1.3 | மின்னணு முறையில் வரி செலுத்துதல் (e- payment of tax) | 37–38 |
| | 18.2.1.4 | ஏற்றுமதியாளர்கள் வரி திருப்புகை பெறுதல் (Refunds to Exporters) | 38–39 |
| | 18.2.1.5 | மின்னணு முறையில் வருடாந்திர நமூனாக்களை சமர்ப்பித்தல் (e-filing of Annual Returns) | 39 |
| | 18.2.1.6 | தகவல்கள் மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம் (Data Retrieval Lab) | 39–40 |
| | 18.3 | இதர மின்னணு சேவைகள் (Other Online Services) | 40 |
| | 18.4 | அக இணைய வலைதளம் (Intranet) | 41–42 |

| | | | |
|---|---|---|---|
| 19. | | முழுமையான கணினிமயமாக்கல் திட்டம் (Total Solution Project) | 42 |
| | 19.1 | நோக்கம் | 42–44 |
| | 19.2 | திட்ட செயலாக்கம் | 44 |
| | 19.3 | உள்கட்டமைப்பு வசதிகள் | 44 |
| 20. | | விருதுகள் | 45 |
| | 20.1.1 | 2013–ஆம் ஆண்டு ஸ்காச் சிறந்த ஆளுமை விருது (Skoch Smart Governance Award 2013) | 45 |
| | 20.1.2 | 2014–ஆம் ஆண்டுக்கான வலை தள ரத்னா விருது (Web Ratna Award) | 45 |
| 21. | | உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 46 |
| | 21.1 | சென்னை நீங்கலாக பிற இடங்களில் வணிகவரி வரி விதிப்பு வட்டங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 46–48 |
| | 21.2 | சென்னையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 48 |
| | 21.3 | சென்னை எழிலகத்திலுள்ள வணிகவரி ஆணையர் அலுவலகத்தை நவீனப்படுத்துதல் | 49 |

| | | | |
|---|---|---|---|
| 22. | | வணிகவரி கோட்டங்களின் எல்லையை மறுசீரமைத்தல் (Reorganisation of Assessment Circles) | 49 |
| | 22.1 | சென்னையைத் தவிர ஏனைய வணிகவரி கோட்டங்களின் எல்லையை மறுசீரமைத்தல் (Reorganisation of Assessment Circles other than Chennai Divisions) | 49–50 |
| | 22.2 | மறுசீரமைக்கப்பட்ட வரிவிதிப்பு வட்டங்களுக்கான வசதிகள் | 50 |
| 23. | | சோதனைச்சாவடிகள் | 51 |
| | 23.1 | சோதனைச் சாவடியில் விரைவு வழி அனுமதி முறை (Fast Track Clearance System at the Check-post) | 51 |
| | 23.2 | சோதனைச் சாவடி கட்டடங்கள் | 51–52 |
| | 23.3 | சோதனைச் சாவடிகளை நவீனமயமாக்குதல் | 53 |
| | 23.4 | நகர்த்திச் செல்லக் கூடிய சிற்றறை அமைத்தல் (Installation of Portable Cabins) | 53–54 |

| | | | |
|---|---|---|---|
| **24.** | | வாகனங்கள் மற்றும் புவி இருப்பிட அமைப்பு அறிதல் (Vehicles and GPS Tracking) | **54** |
| | **24.1** | வாகனங்கள் வாங்குதல் | **54** |
| | **24.2** | செயலாக்கப் பிரிவு வாகனங்களில் புவி இருப்பிட அமைப்பு அறியும் கருவிகள் நிறுவுதல் (Provision of GPS tracking System in Enforcment vehicles) | **55** |
| **25.** | | **2005–**ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் | **55** |

## முன்னுரை

தமிழக அரசின் நிதி ஆதாரங்களுக்காக உள்ள அமைப்புகளில் முதன்மையானதாகத் திகழும் வணிகவரித் துறையானது, அரசின் மொத்த வரி வருவாயில் ஏறக்குறைய 75 விழுக்காட்டினை அளித்து வருகிறது. இத்துறை, 2014–2015–ஆம் நிதியாண்டில் ரூ.60,314.61 கோடி வசூல் செய்துள்ளது. இது, முந்தைய ஆண்டில் வசூலிக்கப்பட்ட ரூ.56,851.85 கோடியை விட ரூ.3,462.76 கோடி அதிகமாகும். மந்தமான பொருளாதார சூழ்நிலையிலும் பெட்ரோலியப் பொருட்களுக்கான விலைக்குறைப்பு அடிக்கடி ஏற்பட்ட போதிலும், கடந்த ஆண்டைக் காட்டிலும் 6.09 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தைக் கண்டுள்ளது.

மாநிலத்தின் வருவாய் பெருக்கத்தின் முக்கியத் துறைகளில் ஒன்றாகத் திகழும் வணிகவரித் துறை, மாநிலத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி ஆதாரங்களை கண்டறிந்து மேம்படுத்துவதில் தமக்குள்ள பொறுப்பினை நன்குணர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்துறை, வணிகவரி நிர்வாக நடைமுறைகளை சீர்செய்து, வரி வசூலிப்பது மட்டுமல்லாமல் வணிகர்களின் நலனிலும் அக்கறை கொண்டு நட்புடன் செயல்பட்டு வருகிறது.

வரி வருவாய் என்பது வரி கொள்கை மற்றும் வரி நிர்வாகத்தைச் சார்ந்தது. மேலும், இது உலக சுற்றுச்சூழல் நிகழ்வுகளையும் சார்ந்ததாகும். வரிக் கொள்கையை சீர்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் காண்பதற்கு அடிப்படை வரி மற்றும் வரி விகிதம், வரி நிர்வாகம் போன்றவற்றால் வரி

வருவாயினை செம்மையாகவும், திறம்படவும் ஈட்ட முடியும். வரி நிர்வாகத்தில் சீர்திருத்தம் மற்றும் வரிக் கோட்பாடு ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று இணைந்துள்ளதால், இவை இரண்டும் முக்கியமானதாகும்.

இந்த அரசு, வரி வசூலுக்கான வழிவகைகளைக் கண்டறிந்து, அதன் மூலம் சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்த உறுதி கொண்டுள்ளது.

## 2. நிர்வாக அமைப்பு

வரிவிதிப்பு மற்றும் வரிவசூல் பணிகள் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. செயல்திறன் மற்றும் சூழலுக்கேற்றவாறு செயல்படும் தன்மையினால் மட்டுமே வரி வருவாய் உயர்ந்து கொண்டே செல்வதை உறுதி செய்ய முடியும். சென்னை தலைமையிடத்தில் வணிகவரி ஆணையரை நிர்வாகத் தலைவராகக் கொண்டு மாநிலம் முழுவதும் பரந்து ஒன்றுக்கொன்று நன்கு பிணைக்கப்பட்டுள்ள கட்டமைப்புடன் கூடிய சார்நிலை அலுவலகங்களால் இது சாத்தியமாகிறது. வணிகவரி ஆணையருக்கு உதவியாக, ஐந்து கூடுதல் ஆணையர்கள் மற்றும் ஒரு இணை ஆணையர் (நிர்வாகம்) உள்ளனர். வரி நிர்வாகத்தில் திறனை எய்திடவும், வரி வசூலிப்பதற்கும் ஏதுவாக துறையானது பணிகளின் அடிப்படையில் பகுக்கப்பட்டு, பல்வேறு பொறுப்புகளும் நான்கு வெவ்வேறு பிரிவுகளால் கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு நிறைவேற்றப்படுகின்றன.

## 2.1 வரிவிதிப்புப் பிரிவு

மாநிலம் முழுவதும் 319 வரிவிதிப்பு வட்டங்கள் மாநிலத்தின் வரி வசூலிப்புக்கு முதுகெலும்பாகத் திகழ்கின்றன. பதிவுச் சான்று வழங்குதல் முதல் வரி வசூலிப்பு செய்தல் வரையிலான பல பணிகளை மேற்கொள்ளும் இந்த வரிவிதிப்பு வட்டங்களுக்கு, அந்தந்த வட்டத்தின் பரப்பளவு மற்றும் பணிச் சுமைகளின் அடிப்படையில் உதவி ஆணையர்கள் / வணிகவரி அலுவலர்கள் தலைமை அலுவலர்களாக செயல்படுகின்றனர். இந்த வரிவிதிப்பு வட்டங்கள் மாவட்ட / சரக அளவில் உள்ள 40 நிர்வாகப் பிரிவின் துணை ஆணையர்கள் மற்றும் கோட்ட அளவில் இயங்கும் 10 இணை ஆணையர்களின் நேரடி கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றன.

ஏறக்குறைய 60 விழுக்காடு வருவாயினை அளிக்கும் 100 பெருமளவு வரி செலுத்துவோருக்கான பிரிவு (Large Tax Payers Unit) சென்னையில் இயங்கி வருகிறது. இப்பிரிவானது ஓர் இணை ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் நான்கு துணை ஆணையர்களைக் கொண்டு வரிவிதிப்பு மற்றும் பிற சட்டரீதியான பணிகளை மேற்கொள்கிறது.

மாதாந்திர நமூனாக்களை கூர்ந்தாய்வு செய்தல் வரிவிதிப்பு அலுவலர்களின் முக்கிய கடமையாகும். மேலும், 2008–2009, 2009–2010, 2010–2011 மற்றும் 2011–2012 ஆகிய வருடங்களுக்கு விஞ்ஞான பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 5 விழுக்காடு வணிகர்களின் கணக்குகளை விரிவான முறையில் கூர்ந்தாய்வு செய்ய மார்ச், 2014–ல்

வரிவிதிப்பு அலுவலர்களுக்கு ஆணை பிறப்பிக்கப் பட்டது. 01.04.2014 முதல் தொடங்கப்பட்ட இந்த நடவடிக்கையின் மூலம் வரி வசூல் சிறந்த முறையில் முன்னேற்றம் அடையும் என எதிர்பார்க்கப்பட்டது. இதன்படி, 2014–2015–ஆம் நிதியாண்டில், வரிவிதிப்பு ஆணைகள் மூலம் ரூ.415.09 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இது சிறந்த பயிற்சி மற்றும் சீரிய கண்காணிப்பின் மூலமாக மட்டுமே சாத்தியமானது.

வணிகர்களின் தனிப்பட்ட விவரங்கள் மற்றும் மாண்பு ஆகிய உரிமைகளுக்கு மதிப்பளித்து, வரிவிதிப்பு நடைமுறை கோட்பாடுகளுக்குட்பட்டு அவசியமான விதிமுறைகள் பின்பற்றுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. வரி செலுத்துவோர்களை கையாள்வதற்கும், தாக்கீதுகள் மற்றும் ஆணைகள் பிறப்பிப்பது தொடர்பாகவும் 2015–2016–இல் புதிதாக நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், கணினியின் மூலமாக புள்ளி விவரங்களை கூர்ந்தாய்வு செய்வதற்கான மேம்பட்ட பயிற்சி அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.2 தணிக்கைப் பிரிவு

### 2.2.1 உள் தணிக்கை

தணிக்கை என்பது எந்த ஒரு வரி நிர்வாகத்திலும் உள்ளார்ந்த பகுதியாகும். சரியான வரித்தொகையைக் கண்டறிதல், வரிவிதிப்பில் ஏற்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டுதல், வரித் திருப்புகை மூலம் அரசின் நிதி கசிந்தோடாமல் ஆவணங்களைச் சரிபார்த்துத் தடுத்தல் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான செயல்களை தடுத்து நிறுத்துதல் போன்றவை தணிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

ஆற்றல் மிக்க தணிக்கைக்கு ஒரு தெளிவான அணுகுமுறை மட்டுமின்றி, அறிவார்ந்த கண்ணோட்டம், திடமான தொழில்நுட்ப அறிவு, நல்ல முடிவெடுக்கும் திறன் மற்றும் கூர்ந்த அணுகுமுறை ஆகியன தேவையானதாகும். துறையில் செயல்பட்டு வரும் உள் தணிக்கை குழுக்களிடம் இத்தகைய திறன்களை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டம்/ சரகத்திலும் ஒரு வணிகவரி அலுவலரை உதவியாகக் கொண்டு ஒரு உதவி ஆணையர் தலைமையில் ஓர் உள் தணிக்கைக் குழு செயல்பட்டு வருகிறது. இந்த உள் தணிக்கைக் குழுக்கள் இணை ஆணையரால் வகுக்கப்படும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் தொடர்ச்சியான தணிக்கைகளை மேற்கொள்கின்றன. அனைத்து இணை ஆணையர்களும் தணிக்கை தொடர்பான காலாண்டு முன்னேற்பாடு நிகழ்ச்சி நிரல் அளிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தணிக்கையின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தணிக்கை அலுவலர்கள் கடைபிடிக்க வேண்டிய கோட்பாடுகள் தொடர்பான விரிவான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தணிக்கையின் தரத்தை உயர்த்துவதனால், வரிவிதிப்பு வட்டங்களில் வரிவிதிப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் சரியான முறையில் பின்பற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2014–2015**–ஆம் ஆண்டில் ரூ.**80.60** கோடி வருவாய் உள்ளடக்கிய **9,476** உள் தணிக்கை பத்திகள் தணிக்கைக் குழுவினரால் எழுப்பப்பட்டு, காலாண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, இந்நிதியாண்டில் தணிக்கையின் தரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 மாநிலக் கணக்காயரின் தணிக்கை

வரிவிதிப்பு வட்டங்களில் மாநிலக் கணக்காயரால் வருடாந்திர தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மாநிலக் கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தணிக்கைக் குறிப்புகள் வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களால் தொடர்ச்சியாக நடத்தப்படும் துறையளவிலான தணிக்கைக் குழுக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகின்றன. இக்கூட்டங்களில் முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் மற்றும் மாநில கணக்காயர் அலுவலகத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

மாநிலக் கணக்காயர் மற்றும் உள் தணிக்கைக் குழுவின் தணிக்கைக் குறிப்புகளின் மீது இறுதி முடிவெடுத்து வரி வசூலை மேம்படுத்த ஒரு சிறப்பு இயக்கம் ஏப்ரல் 2014–இல் தொடங்கப்பட்டுள்ளது. 2014–2015–ஆம் ஆண்டில் மாநிலக் கணக்காயரின் பத்திகளின் மீதான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, திருத்திய வரிவிதிப்பாணைகள் பிறப்பிக்கப்பட்டதன் மூலம் ரூ.23.09 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் இதே காலகட்டத்தில் இதன் மூலம் ரூ.12.53 கோடி வசூலிக்கப்பட்டது.

2014–2015–இல் துறையின் செயலாக்கப் பிரிவினை கருப்பொருளாகக் கொண்டு ஒரு ஆய்வு மாநிலக் கணக்காயரால் மேற்கொள்ளப்பட்டது. தற்போது முடிவுறும் தருவாயிலுள்ள முழுமையான கணினிமயமாக்கலுக்கான வடிவமைப்பு உள்ளிட்ட ஏனைய செயல்பாடுகளிலும் மாநிலக் கணக்காயரின்

கணினி மேம்பாடு தொடர்பான ஏராளமான பரிந்துரைகள் உட்புகுத்தப்பட்டுள்ளன. மேலும், 2006–ஆம் ஆண்டு தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தின் கீழ் வரிவிதிப்பு முறைகள் தொடர்பாக ஓர் ஆய்வும் மாநிலக் கணக்காயரால் தொடங்கப்பட்டுள்ளது.

## 2.3 மேல்முறையீட்டுப் பிரிவு

### 2.3.1 முதல் மேல்முறையீடு

வரிவிதிப்பு அலுவலரின் ஆணைக்கு எதிரான முதல் மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு துணை ஆணையர்/ இணை ஆணையரிடம் உள்ளது. மாநிலத்தில் 20 மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் 2 மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளிடம் துறையின் வழக்குகளை முன்வைத்திடும் பொருட்டு, உதவி ஆணையர் பணி நிலையில் துறைப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர்.

### 2.3.2 தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர் / இணை ஆணையரால் பிறப்பிக்கப்படும் ஆணைக்கு எதிராக சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு முன்பு இரண்டாம் மேல்முறையீடு செய்யலாம். தீர்ப்பாயத்தின் கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும்

கோயம்புத்தூரில் அமைந்துள்ளன. மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு, மாவட்ட நீதிபதி நிலையில் உள்ளவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணி / வருமான வரித்துறை / மத்திய கலால் துறை அல்லது சுங்கத் துறை அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை அல்லது இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனம் அல்லது இந்திய விலை மதிப்பீட்டு கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் யாரேனும் ஒருவர் இரண்டாவது உறுப்பினராக நியமிக்கப்படுவார். கூடுதல் ஆணையர் பணி நிலையில் உள்ள துறை அலுவலர் ஒருவர் துறை உறுப்பினராகவும் இத்தீர்ப்பாயத்தில் நியமிக்கப்படுவார்.

விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கூடுதல் அமர்வுகள், சார்நிலை நீதிபதி நிலையில் நீதித்துறை உறுப்பினர் ஒருவர் தலைமையிலும், இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக கூடுதல் உறுப்பினர் ஒருவரைக் கொண்டும் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளன. வழக்குகளில் துறையின் வாதத்தினை முன்வைத்திடும் பொருட்டு இணை ஆணையர் பணி நிலையில் ஒரு மாநிலப் பிரதிநிதியும், துணை ஆணையர் பணி நிலையில் ஒரு கூடுதல் மாநிலப் பிரதிநிதியும், முறையே முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில் வாதிடுவர்.

### 2.3.2.1 விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கான வசதிகள்

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாய அலுவலகங்கள் சிறப்பாக செயல்பட தேவையான வசதிகள் அதாவது அச்சு இயந்திரத்துடன் கூடிய கணிப்பொறி **(computer system with printers),** நகல் எடுக்கும் இயந்திரம் (Copier machines), நிகரி (fax) மற்றும் தடையில்லா மின் வழங்கும் கருவி (UPS) போன்றவை ரூ.5.73 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

### 2.3.3 உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வரி வழக்குகள்

வரி வழக்குகள் தொடர்பாக, துறையின் சார்பில் ஓர் அரசு சிறப்பு வழக்குரைஞர் உயர் நீதிமன்றத்திலும், தமிழ்நாடு பதிவு வழக்கறிஞர் ஒருவர் உச்ச நீதிமன்றத்திலும் வாதிடுவர். மதுரையிலுள்ள சென்னை உயர் நீதிமன்றத்தின் அமர்வில் அரசு சிறப்பு வழக்குரைஞர்(வரிகள்) ஒருவரை நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிலுவையிலுள்ள வழக்குகளை விரைவுபடுத்தி அரசுக்கு வருவாய் சேர்க்கப்படும்.

கூடுதல் ஆணையர் (வரிகள்) மற்றும் இணை ஆணையர் (சட்டம்) ஆகியோரின் கீழ் இயங்கும் ஒரு சட்டப் பிரிவு உரிய அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

ஆகியவற்றின் முன், நிலுவையிலுள்ள வரி வழக்குகளை முடிக்க துணை புரிகிறது. இவ்வாறே கோட்டம் மற்றும் செயலாக்க இணை ஆணையர்கள் மேல்முறையீடு மற்றும் இரண்டாம் மேல்முறையீடு களங்களில் உரிய மேல்முறையீடுகளை செய்ய ஆவணம் தாக்கல் செய்கின்றனர்.

## 2.4 செயலாக்கப் பிரிவு

### 2.4.1 செயலாக்கப் பிரிவு கோட்டங்கள்

செயலாக்கப்பிரிவு மாநிலம் முழுவதும் 8 கோட்டங்களையும், சென்னையில் மாநிலங்களுக்கு இடையேயான ஒரு புலானய்வுப் பிரிவையும் கொண்டுள்ளது. அனைத்து செயலாக்க கோட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுப் பிரிவும் இணை ஆணையர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. சரக்குப் போக்குவரத்து வாகனங்களில் சோதனை மற்றும் திடீர் தணிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் வணிக இடங்களில் ஆய்வு / தணிக்கை மேற்கொள்ளுதல் போன்றவற்றின் மூலமாக வரி ஏய்ப்பினைக் கட்டுப்படுத்துதல் செயலாக்கப்பிரிவின் முதன்மைப் பணியாகும்.

ஆந்திரபிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநில எல்லைகளில் அமைந்துள்ள 28 சோதனைச் சாவடிகள், மாநிலத்திற்குள் முக்கியமான இடங்களில் அமைந்துள்ள 13 சோதனை முனையங்கள் மூலம் மாநிலங்களுக்கிடையேயான சரக்கு போக்குவரத்து கண்காணிக்கப்படுகிறது.

2014–2015–ஆம் ஆண்டில் 33,28,366 வாகனங்கள் சோதனைச் செய்யப்பட்டு 14,293 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.12.45 கோடி இணைக்கத் தொகை (Compounding fees) வசூல் செய்யப்பட்டுள்ளது. 2013–2014–ஆம் ஆண்டில் 26,93,977 வாகனங்கள் சோதனைச் செய்யப்பட்டு 14,342 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.10.09 கோடி இணைக்கத் தொகை வசூல் செய்யப்பட்டது. அடிக்கடி வரி ஏய்ப்பிற்குட்படும் பொருட்களான சமையல் எண்ணெய் மற்றும் ஓடுகள் (Vegetable Oil and Tiles) தொடர்பான சரக்குப் போக்குவரத்து மீது மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் மூலம் சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிகமாக இணைக்கத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

61 சுற்றும் படைகளுக்கும் ஒரு படைக்கு ஒரு ஈப்பு (Jeep) வீதம் வழங்கப்பட்டு சரக்குகளின் நடமாட்டம் தொடர்பான ஆவணங்களின் உண்மை நிலையைக் கண்டறியும் பொறுப்பு இப்படைகளுக்கு அளிக்கப் பட்டுள்ளது. ஒரு சுற்றும் படையில் ஒரு வணிக வரி அலுவலர் மற்றும் ஒரு துணை வணிக வரி அலுவலர் ஆகியோர் உள்ளனர். 2014–2015–ஆம் ஆண்டில் 7,47,478 வாகனங்கள் சோதனைச் செய்யப்பட்டு 37,950 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.50.35 கோடி இணைக்கத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது. 2013–2014–ஆம் ஆண்டில் 6,68,794 வாகனங்கள் சோதனை செய்யப்பட்டு, 35,136 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.32.46 கோடி இணைக்கத் தொகை வசூல் செய்யப்பட்டது.

இது தவிர, வணிகம் நடைபெறும் இடங்களில் வரி ஏய்ப்பினைக் கண்டறிவதற்கு, தணிக்கைகள் மற்றும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ள செயலாக்கப் பிரிவில் கூடுதலாக **144** குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுவில் ஒரு வணிக வரி அலுவலர் மற்றும் ஒரு துணை வணிக வரி அலுவலர் உள்ளனர். வரி ஏய்ப்பில் ஈடுபட அதிக வாய்ப்புள்ள வணிகர்களின் வணிகம் நடைபெறும் இடங்களே தணிக்கைக்காக தெரிவு செய்யப்படுகின்றன. **2014–2015**–ஆம் ஆண்டில் **1,243** தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதன் மூலம் ரூ.**1,285** கோடி வருவாய் ஈட்டக் கூடிய இனங்களில், ரூ.**45.45** கோடி செயலாக்கக் கோட்டங்களின் மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இதே போல, **1,610** திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.**3,375.49** கோடி வருவாய் ஈட்டக் கூடியதாகக் கருதப்பட்ட இனங்களில் செயலாக்கக் கோட்டங்களின் மூலம் ரூ.**63.40** கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

### 2.4.2 மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுப் பிரிவு (Inter State Investigation Cell)

ஒரு இணை ஆணையர் தலைமையிலான மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு, மாநிலங்களுக்கிடையேயான வணிகப் பரிவர்த்தனை களில் வரி ஏய்ப்பினைக் கட்டுப்படுத்த, பிற மாநில அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், வரி ஏய்ப்பினைத் தடுப்பதற்கான மேல் நடவடிக்கை மேற்கொள்வதற்காக தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்கிறது. இக்குழு, குறிப்பாக, மாநிலத்திற்கு உள்ளேயும் / வெளியேயுமான வரி ஏய்ப்புக்குள்ளாகும் பொருட்களின் நடமாட்டத்தினைக் கண்காணிக்கிறது.

**2014–2015–**ஆம் ஆண்டில் ரூ.**258.77** கோடி வருவாய் ஈட்டக் கூடியதான **80** ஆய்வுக் கோப்புகள் (Investigation filles) உருவாக்கப்பட்டு உரிய செயலாக்கக் கோட்டங்களுக்கு அனுப்பப்பட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் ரூ.**31.56** கோடி வரி கேட்பு மற்றும் ரூ.**1.125** கோடி வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

### 2.4.3. வர்த்தகப் புலனாய்வு அலகு (Business Intelligence Unit)

வணிக வரி ஆணையரின் அலுவலகத்தில், முதன்மைச்செயலர் மற்றும் வணிக வரி ஆணையர் அவர்களின் நேரடி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டில் வர்த்தகப் புலனாய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஒரு இணை ஆணையர் தலைமையின் கீழ் ஒரு துணை ஆணையர், நான்கு உதவி ஆணையர்கள் ஒரு உதவி கணினி நிரலர்(Computer Programmer) மற்றும் ஒரு புள்ளியியல் ஆய்வாளர் ஆகியோரைக் கொண்டு இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

### 2.4.3.1 மாநில வர்த்தகப் புலனாய்வு அலகு (State Business Intelligence Unit)

மாநில அளவிலான வர்த்தகப் புலனாய்வு அலகு, வணிகர்களின் நமூனாக்கள், துறையின் சோதனைச் சாவடிகள், மத்திய மற்றும் பிற மாநில அரசுகளின் முகமைகள் போன்றவைகளிடமிருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நுண்ணறிவுடன் கூர்ந்தாய்வு செய்கிறது. வரி ஏய்ப்பிற்குட்படும் பொருட்கள், வழக்கத்திற்கு மாறான உள்ளீட்டு வரி வரவு (Input Tax Credit) மற்றும் வரி திரும்பப் பெறுதல் தொடர்பான கோரிக்கைகள்,

அசாதாரண வெளிமாநில சரக்கு மாற்றம் (Stock Transfer) போன்ற நேர்வுகளில் இப்பிரிவு சிறப்புக் கவனம் செலுத்துகிறது. 2014–2015–ஆம் ஆண்டில் இதன் மூலம் ரூ.2.41 கோடி ஈட்டப்பட்டது.

### 2.4.3.2 கோட்ட வர்த்தகப் புலனாய்வு அலகு (Divisional Business Intelligence Unit)

கோட்ட அளவிலான வர்த்தகப் புலனாய்வு அலகுகள் ஒவ்வொரு செயலாக்கக் கோட்டத்திலும் இணை ஆணையர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. காலாண்டு ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் கணினித்திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டதன் காரணமாக புலனாய்வுத்திறன் முன்னேற்றம் அடைந்துள்ளது.

## 3. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு (Statistics and Research Cell)

வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் புள்ளியியல் துறை இணை இயக்குநர் தலைமையிலான புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று கூடுதல் இயக்குநர் (துணிக்கை) கண்காணிப்பில் இயங்கி வருகிறது. இப்பிரிவில், ஒரு இணை இயக்குநர் (புள்ளியியல்), இரு புள்ளியியல் அலுவலர்கள், ஒரு புள்ளியியல் ஆய்வாளர் மற்றும் இரு உதவி புள்ளியியல் ஆய்வாளர்களும் உள்ளனர்.

ஒவ்வொரு வணிகவரிக் கோட்டத்திலும், இணை ஆணையருக்கு உதவியாக ஒரு இளநிலை ஆராய்ச்சி அலுவலரும், துணை ஆணையர்களுக்கு உதவியாக ஒவ்வொரு வணிகவரி மாவட்டம் /சரகத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் உள்ளனர்.

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் கீழ்கண்ட அறிக்கைகள் / வெளியீடுகள் தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்றன:

1. வணிகவரித் துறை – ஒரு கண்ணோட்டம் – ஆண்டுதோறும்
2. வணிகவரித் துறையின் முக்கிய குறியீடுகள் – ஆண்டுதோறும்
3. வணிகவரித் துறையின் புள்ளி விவரத்தொகுப்பு – காலமுறை அறிக்கை – ஆண்டுதோறும்
4. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் 100 பெரு வணிகர்களின் வருவாய் பகுப்பாய்வு – மாதந்தோறும்
5. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்த வருவாய் பகுப்பாய்வு– மாதந்தோறும்
6. சட்ட வாரியான மற்றும் கோட்ட வாரியான வருவாய் அறிக்கை – மாதந்தோறும்
7. கோட்டங்களின் செயல்பாடு குறித்த அறிக்கை – மாதந்தோறும்

## 4. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்

வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் 1982–ஆம் ஆண்டு முதல் இணை ஆணையர் பணித் தரத்தில் உள்ள ஒரு இயக்குநரின் தலைமையில் சென்னையில் இயங்கி வருகிறது. வணிகவரித் துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் 'பணியிடைப் பயிற்சி' மற்றும் 'புத்தாக்கப் பயிற்சி' அளிப்பது இதன் நோக்கமாகும். வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய கோட்டத் தலைமையிடங்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. துறையிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படை கணினிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

2014–2015–ஆம் ஆண்டு இத்துறையைச் சார்ந்த பணியாளர் மற்றும் அலுவலர்களுக்கான பயிற்சிக்காக ரூ.17.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள வணிக வரிப் பணியாளர் பயிற்சி மையங்கள் மூலம், 1150 துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி மற்றும் தனிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், துறை சார்ந்த நடவடிக்கைகளை திறம்படக் கையாளும் பொருட்டு, வரி ஏய்ப்பு மற்றும் மோசடி அபாயத்தை எதிர்கொள்ளும் மேலாண்மை (Fraud Risk Management), வழக்கு முறைமைகளை கற்பித்தல் (Case Method Teaching), குழு அமைத்து செயல்படுதல் (Team Building Activities), திறமையை பெறுதல் மூலம் வெற்றி பெறுதல் (Success Through Excellence) மற்றும் இணையதள

தடயவியல் (Cyber Forensics) போன்ற பயிற்சிகளில் சிறப்பாகச் செயல்படும் பல்வேறு முன்னோடி நிறுவனங்கள் மூலமாக, வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையங்களில் வணிக வரித் துறையின் முதுநிலை அலுவலர்களான இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் ஆகியோர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**2014–2015–**ஆம் நிதியாண்டில், வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலைய நூலகத்திற்கு ரூ.**1.45** இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன. சேலம் மண்டல பயிற்சி நிலையம் **11.06.2014** அன்று திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும், வேலூர், கோவை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டல பயிற்சி நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் ரூ.**715.00** லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இவை **2015–2016–**ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 4.1. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்திற்கான வசதிகள்

பல்வேறு நிலைகளில் உள்ள அலுவலர்களுக்கு அவர்களின் செயல்திறனை மேலும் மேம்படுத்தும்பொருட்டு திருச்சி மண்டல பயிற்சி மையத்தின் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.**25.50** இலட்சம் மற்றும் சென்னையிலுள்ள வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் மற்றும் பிற மண்டல மையங்களில் அனைத்து நிலையிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பயிற்சிக்கான செலவினங்களுக்காக ரூ.**143.27** இலட்சம் கடந்த ஆண்டு

அறிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் வரி நிர்வாக அலுவலர்களின் திறன் சிறப்பான முறையில் மேம்பாடு அடையும்.

## 5. துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வணிகவரித் துறையால் பின்வரும் சட்டங்கள் நிர்வகிக்கப்படுகின்றன:–

1. **2006–** ஆம் ஆண்டு தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் **(1.1.2007** முதல்)
2. **1956–** ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்
3. **1959–** ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் **(31.12.2006** வரை)
4. **1970–**ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் **(31.12.2006** வரை)
5. **1939–** ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம்
6. **1935–**ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம்
7. **1981–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம்
8. **1990–**ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம்

9. **2001**–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம் (சென்னை உயர்நீதிமன்றம் தனது **23.3.2007** நாளிட்ட தீர்ப்பின்படி இச்சட்டம் செல்லாது என ஆணையிட்டது. இதன் மீதான மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது)

10. **1983**–ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம்

## 6. வருவாய் வசூலின் போக்கு

இந்தியப் பொருளாதாரத்தில் பொதுவான மந்த நிலை ஏற்பட்டுள்ள போதிலும், வரி ஏய்ப்பினைத் தடுத்திட மேற்கொள்ளப்பட்ட சிறந்த கண்காணிப்பு மற்றும் தீவிரமான செயலாக்கத்தின் விளைவால் வரி வருவாய் வசூலில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை இத்துறை தக்க வைத்துள்ளது. மதிப்புக் கூட்டு வரி நடைமுறைபடுத்தப்பட்ட பின் கடந்த ஐந்தாண்டுகளில் துறையால் நிர்வகிக்கப்படும் அனைத்துச் சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் விவரங்கள் பின்வருமாறு :–

| வருடம் | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2010–2011 | 31,117.00 |
| 2011–2012 | 39,545.00 |
| 2012–2013 | 47,885.00 |
| 2013–2014 | 56,851.87 |
| 2014–2015 | 60,314.61 |

## 7. கடந்த ஐந்தாண்டுகளில் சட்டங்கள் வாரியான வருவாய்

கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு சட்டங்கள் வாரியான வருவாய் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| | சட்டம் | 2010–2011 | 2011–2012 | 2012–2013 | 2013–2014 | 2014–2015 |
|---|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம் | 26,558 | 33,997 | 42,038 | 51,245 | 53,930.47 |
| 2 | மத்திய விற்பனை வரிச் சட்டம் | 2,263 | 2,819 | 2,904 | 3,116 | 3,811.17 |
| 3 | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 350 | 259 | 261 | 218 | 195.21 |
| 4 | கேளிக்கை வரிச் சட்டம் | 16 | 59 | 70 | 68 | 82.97 |
| 5 | பந்தய வரிச் சட்டம் | 6 | 7 | 6 | 5 | 5.60 |
| 6 | ஆடம்பர வரிச் சட்டம் | 216 | 256 | 290 | 299 | 319.26 |
| 7 | நுழைவு வரிச் சட்டம் (வாகனம்) | 1,708 | 2,148 | 2,316 | 1,900 | 1,969.93 |
| | **மொத்தம்** | **31,117** | **39,545** | **47,885** | **56,851** | **60,314.61** |

## 8. வரி நிர்வாகம்

வணிகவரித் துறையில் குறைந்த செலவில் மேம்பட்ட வருவாயினை அடைவதில் நிர்வாகத் திறமை ஆண்டுக்காண்டு மேம்பட்டுள்ளது. நிர்வாக செலவினமானது வணிகவரி மொத்த வசூலில் ஒரு விழுக்காட்டைக்கூட எந்த வருடத்திலும் கடந்ததில்லை. **2014–2015–**ஆம் ஆண்டிற்கான மொத்த வணிகவரி வருவாயில், வெறும் **0.43** விழுக்காடுதான் நிர்வாகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், துறையின் ஒரு பணியாளர் மூலம் கிடைக்கும் வருவாய் வாயிலாகக் கணக்கிடப்படும் மொத்தப் பணியாளர்களின் பணித்திறன் ரூ.3.44 கோடியிலிருந்து ரூ.8.89 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில் வருவாய் பணித்திறன் 22.6 விழுக்காடு வளர்ச்சியடைந்துள்ளது. இதேகாலகட்டத்தில் முந்தைய ஆண்டுகளின் வருவாய் வளர்ச்சி விகிதம் 18.73 விழுக்காடாக இருந்தது. இந்த மேம்பட்ட பணித்திறன் கணினிசார்ந்த பயன்பாடு மற்றும் சிறந்த வரி நிர்வாகத்தினால் மட்டுமே சாத்தியமானது.

## 9. வரி ஏய்ப்பு குறித்த தகவல் அளிப்போருக்கு பரிசளிப்புத் தொகையை அதிகப்படுத்துதல்

வணிகவரி ஏய்ப்பைக் கட்டுப்படுத்தி, அரசு வருவாயை அதிகரிக்கும் பொருட்டு, வரி ஏய்ப்பு குறித்த தகவல் அளிப்போருக்கு, பரிசு வழங்கும் திட்டம் 1991 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி அளிக்கப்படும் தகவலின் அடிப்படையில் முழுவதுமாக வசூலிக்கப்படும் வரித் தொகையில் 10 விழுக்காடு அல்லது ரூ.25,000/– உச்சவரம்பாக உள்ளது. இதனை ரூ.1,00,000/–ஆக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பரிசளிப்புத் திட்டத்தின் கீழ் அதிகளவிலான வரி ஏய்ப்பினை கண்டறிந்து வருவாய் ஈட்டித் தரும், துறை அலுவலர்கள் மற்றும் தனி நபர்களுக்கும் சில சிறப்பு நிகழ்வுகளில் தகுந்த சன்மானம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 10. மாநில மொத்த உற்பத்தி விகிதத்துடன் வரிவருவாய் ஒப்பீடு (Gross State Domestic Product Ratio)

மாநில மொத்த உற்பத்தியின் அடிப்படையில் இந்தியாவில் நான்காவது பெரிய மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. மாநில மொத்த உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், வருவாய் வசூலானது, அதன் ஆழம் (வரி வீதங்கள்) மற்றும் அகலத்தின் (வரி ஏய்ப்பினைத் தவிர்த்தல்) குறியீடாக செயல்படுகிறது.

2010–2011–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013–2014–ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தியுடனான நிகர வணிகவரி வருவாய் விகிதம் 5.21 விழுக்காட்டிலிருந்து 6.52 விழுக்காடாக சீராக உயர்ந்துள்ளது. இது வணிகவரி வசூலின் சீரான முன்னேற்றத்தைக் காட்டுவதாக உள்ளது. மொத்த உற்பத்தியுடனான மாநில வரிவருவாய் 2013 – 2014–ஆம் ஆண்டில் 10.07 விழுக்காடாக அமைந்தது.

மேலும், திறன் விகிதம் (மாநில மொத்த உற்பத்தியுடனான வரி வருவாய் விகிதம் நிலையான வரி விகிதத்தால் வகுத்து கணக்கிடப்படுகிறது) வரி குறியீட்டு கணக்கீடு மற்றும் வருவாய் ஈட்டுதலில் மதிப்புக்கூட்டு வரியின் திறன்பாடு 2010–ஆம் ஆண்டிலிருந்து சீரான முன்னேற்றமடைந்து தற்போது 45 விழுக்காடாக உயர்ந்துள்ளது. மேம்பட்ட செயலாக்கப் பணிகள் மற்றும் முழுமையான கணினிமயமாக்கல் (Total Solution project) ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் போது இவ்விகிதாச்சாரம் மேலும் அதிகரிக்கும்.

## 11. வரி சீரமைப்பு

### 11.1 வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதுவதற்கு வழிவகை செய்தல்

வணிகருக்கான வரிக்கணிப்பு ஆணையை ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் கட்டாயம் பிறப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை கைவிடப்பட்டுள்ளது. வரி செலுத்தியதற்கான தகுந்த ஆதாரங்கள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் உரிய படிவத்தில் நமூனாக்கள் வணிகரால் சமர்ப்பிக்கப்பட்டால், அதைத் தொடர்ந்து வரும் ஆண்டின் அக்டோபர் மாதம் **31–**ஆம் தேதியன்று அவர் வரிக்கணிப்பு செய்யப்பட்டதாக கருதப்படுவார். இந்த நடைமுறை **19.06.2012** முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

### 11.2 தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பு

வரிவீதம் தொடர்பான கூறு எதனையும் தெளிவாக்குவதற்கு தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பினை மாநில அளவில் அரசு நிறுவியுள்ளது. வணிகவரி ஆணையர், கூடுதல் ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் கூடுதல் ஆணையர் (சீராய்வு மனு) ஆகியோரைக் கொண்ட இந்த அதிகார அமைப்பு, தனது செயல்பாட்டினை **31.10.2011** முதல் துவங்கியுள்ளது. **31.03.2015** வரை **379** இனங்களில் தெளிவுரை வழங்கியுள்ளது.

## 11.3 பதிவு பெற்ற சிறு வணிகர்களுக்கான உள்ளீட்டு வரி வரவு (Input Tax Credit)

குறித்துரைக்கப்பட்ட வரிவிதிப்பு வரம்பினை கடந்திடலாம் என எதிர்பார்த்து வரி வசூலிக்கப்பட்டு, அவ்வரம்பினை கடக்காமல் இருக்கும் பதிவு பெற்ற சிறு வணிகர்களுக்கு உள்ளீட்டு வரி வரவு கிடைத்திடும் வசதி 01.04.2012 முதல் செய்து தரப்பட்டுள்ளது.

## 11.4 இணக்கவரி (Compounding Tax) செலுத்தும் முறையில் மாற்றம்

முன்னர், இணக்கவரி செலுத்தும் வணிகர் தனது மொத்த வரிவிதிக்கத்தக்க விற்பனைத் தொகை ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மிகும்போது தனது மொத்த வரிவிதிக்கத் தக்க விற்பனைத் தொகையின் மீதும் அட்டவணை வரிவீதங்களின்படி வரி செலுத்த வேண்டியிருந்தது. இணக்க வரி செலுத்தும் முறையின் கீழ் வரி செலுத்தும் வணிகரின் வரிவிதிக்கத்தக்க பொருட்கள் தொடர்பான விற்பனைத்தொகையானது, அந்த ஆண்டில் எப்பொழுது ஐம்பது இலட்சம் ரூபாய் என்ற அளவை எட்டுகின்றதோ, அத்தகைய வணிகர் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட அவருடைய வரிவிதிக்கத்தக்க விற்பனைத்தொகையின் மீது மட்டும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வரிவீதங்களின்படி வரி செலுத்தினால் போதுமானது என்ற சட்டத்திருத்தத்தினை 1.4.2012 முதல் அரசு மேற்கொண்டுள்ளது.

**11.5 மாநிலங்களுக்கு இடையே நடைபெறும் பொருள் விற்பனைகளில்'சி' படிவமின்றி நடைபெறும் விற்பனைகளுக்கும் உள்ளீட்டு வரி வரவு வைத்தல் (Input Tax Credit(ITC) on inter-State sale of goods without "C" Forms)**

'சி' படிவமின்றி நடைபெறும், மாநிலங்களுக்கு இடையேயான பொருள் விற்பனைகளிலும் உள்ளீட்டு வரி வரவை (Input Tax Credit) வணிகர்கள் பெற்றுக்கொள்ள ஏதுவாக, **2006**–ஆம் ஆண்டு தமிழ் நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் பிரிவு **19(5)**–ன் கீழ் வரும் கூறான (C)–ஆனது **1.4.2015** முதல் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

**12. தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வரி விலக்குகள் / குறைப்புகள் / தள்ளுபடி**

**12.1 வரி விலக்குகள் / குறைப்புகள்**

**(அ)** CFL விளக்குகள் மற்றும் CFL குழல் விளக்குகள், மின் சக்தியால் இயங்கக்கூடிய இரு சக்கர வாகனங்கள், சானிடரி நேப்கின்கள் மற்றும் டயாபர்கள், தீக்குச்சித் தொழிற்சாலைகள் உபயோகப்படுத்தும் மரக் குச்சிகள் மற்றும் மரப் பட்டைகள் ஆகியவற்றிற்கு மதிப்புக் கூட்டு வரி **14.5** விழுக்காட்டிலிருந்து **5** விழுக்காடாக **01.04.2012** முதல் குறைக்கப்பட்டுள்ளது.

**(ஆ)** கோதுமை, ஒட்ஸ், இன்சுலின், கையினால் தயாரிக்கப்படும் பூட்டுகள், பாலூட்டும் புட்டிகள்

மற்றும் பாலூட்டும் காம்புகள் மற்றும் தலைக்கவசம் ஆகியவற்றிற்கு **01.04.2012** முதல் மதிப்புக் கூட்டு வரியிலிருந்து முற்றிலும் விலக்களிக்கப்பட்டது

**(இ)** ஏலக்காய் மீதான மதிப்புக் கூட்டு வரி **01.04.2015** முதல் **5** விழுக்காட்டிலிருந்து **2** விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.

**(ஈ)** அனைத்து வகையான ஒளி உமிழ் டையோடு விளக்குகள் (LED lamps), காற்றழுத்த கருவிகள் (air compressors), **10** குதிரைத்திறன் வரையிலான மோட்டார் பம்புகள் மற்றும் அவற்றின் பாகங்கள் மற்றும் அலைபேசிகள் (mobile phones) ஆகியவற்றின் மீதான மதிப்புக்கூட்டு வரி, **14.5** விழுக்காட்டிலிருந்து **5** விழுக்காடாக **1.4.2015** முதல் குறைக்கப்பட்டுள்ளது.

உ) மீன்பிடி கயிறுகள், மீன்பிடி மிதவைகள், மீன்வலை முறுக்கு நூல், மீன்பிடி விளக்குகள் மற்றும் மீன்பிடி திருப்புகை போன்ற மீன்பிடிப்புக்கு பயன்படும் துணைப்பொருட்கள் மற்றும் கொசுவலைகள் மீது விதிக்கப்படும் மதிப்புக்கூட்டு வரி **1.4.2015** முதல் முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

ஊ) நெய்தலுக்கு முன்பாக நூலூக்கு பசையிடுவது தொடர்பான ஒப்பந்தப் பணிகளுக்கு **01.04.2015** முதல் மதிப்பு கூட்டு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

எ) சமையல் எரி வாயு மீதான 4 விழுக்காடு வரி **01.07.2011** முதல் முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

ஏ) மின்சார உற்பத்திக்கு துணையாக இருக்கும் ஜென்செட்டுகள் மீதான வரிவீதம் ஜெனரேட்டர்களுக்கு ஈடாக **07.12.2012** முதல் **14.5** விழுக்காட்டிலிருந்து **5** விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.

ஐ) பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களின் மீது **14.5** விழுக்காடு வரி விதிக்கப்பட்டு வந்தது. மாற்றுத்திறனாளிகளின் இடம் பெயரும் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு, பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களின் விற்பனையின் மீது செலுத்த வேண்டிய மதிப்புக்கூட்டு வரிக்கு **14.12.2012** முதல் விலக்களிக்கப்பட்டுள்ளது.

## 12.2 வரித் தள்ளுபடி

**2006**–ஆம் ஆண்டு தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வரித் தள்ளுபடி (Waiver) கீழ்கண்டவாறு:-

### 12.2.1 நெசவாளர் நலன்

நெசவாளர் நலன் கருதி தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தி நிறுவனம் (TANSILK) **1959**–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்த

வேண்டிய கூடுதல் வரி மற்றும் அபராதத் தொகை ரூ.20 இலட்சம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

### 12.2.2. மக்கள் நல்வாழ்வு

மத்திய அரசு நிறுவனமான அரசு மருந்தக பணிமனை, (Government Medical Stores Department) 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி மற்றும் 1956–ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி சட்டங்களின் கீழ் செலுத்த வேண்டிய வரி நிலுவைத்தொகை ரூ 59 இலட்சம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

### 12.2.3. தொழில்துறை

தொழில்துறை மற்றும் நிதி புனரமைப்பு (BIFR) கழகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் நலிவுற்ற தொழிற்சாலைகள் 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி மற்றும் 1956–ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி சட்டங்களின் கீழ் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டி ரூ.40 இலட்சம் அளவுக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

## 13. 1981–ஆம் ஆண்டைய ஆடம்பர வரிச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட வரிவிலக்கு

சாதாரண மற்றும் நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில், 1981–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஆடம்பர வரிகள் சட்டத்தின் கீழ் ஆடம்பர வரி செலுத்துவதிலிருந்து விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு 199/- ரூபாயிலிருந்து 499/- ரூபாயாக 4.7.2013 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

## 14. நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்கள்

ஆண்டுதோறும், மாநிலம் முழுவதுமுள்ள வணிகம் மற்றும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்களை வணிக வரித் துறை நடத்தி வருகிறது. **2011–**ஆம் ஆண்டிலிருந்து **1.8.2011, 22.3.2012, 18.3.2013,** மற்றும் **11.2.2014** ஆகிய நாட்களில் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் தலைமையேற்று நடத்திய இக்கூட்டங்களில், மாண்புமிகு வணிகவரி மற்றம் பதிவுத் துறை அமைச்சர், நிதித் துறை முதன்மைச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை முதன்மைச் செயலர், வணிகவரி ஆணையர் மற்றும் துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். **2015–**ஆம் ஆண்டுக்கான கூட்டம் **9.3.2015** அன்று நடைபெற்றது. இக்கூட்டங்களில் பெறப்பட்ட கருத்துக்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வணிகர்களின் கோரிக்கைகள் மற்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில், வரிக் குறைப்பு மற்றும் வரி விலக்குகள் அளிக்கப்படுவதுடன், **2006–**ஆம் ஆண்டு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் அவ்வப்போது முக்கிய திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 15. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (Goods and Services Tax)

அனைத்து மாநிலங்களிலும் மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தியபின் மறைமுக வரி சீரமைப்பின் அடுத்தகட்ட நடவடிக்கையாக சேருமிடம் (Destination based) அடிப்படையாகக் கொண்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முறையை மாநில நிதியமைச்சர்களைக்

கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை ஏற்று, அமல்படுத்த மத்திய அரசு முனைந்துள்ளது.

மத்திய அரசு சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை ஏப்ரல் 2010 முதல் அமலுக்குக் கொண்டு வருவதாக இருந்தது. ஆனால், தேசிய அளவில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் மீதான முக்கிய அம்சங்களில் (Host of Issues) ஒருமித்த கருத்தினை எட்டமுடியவில்லை.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்பது, ஒரே வரி அடிப்படை மீது மத்திய மற்றும் மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகளை உள்ளடக்கிய ஒரு இரட்டை வரிவிதிப்பு முறை ஆகும். விலக்களிக்கப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகள் தவிர அனைத்து பொருள்கள் மற்றும் சேவைகளும் இவ்வரி முறைக்குள் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு வேறுபாடு இல்லாமல் பொதுவான சட்டத்தின் கீழ் கொண்டு வர கருதப்பட்டுள்ளது. தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் இருந்த போதும், மத்திய அரசால் 122–வது அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதா 2014 மக்களவையில் நிறைவேற்றப்பட்டு தற்போது மாநிலங்களவையின் பரிசீலனையில் உள்ளது.

## 15.1. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான தமிழக அரசின் நிலைப்பாடு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான 122–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதா 2014 மீது பல மாறுபட்ட கருத்துகள் தமிழக அரசுக்கு உள்ளன. இம்மசோதாவின் விளைவுகள் மாநிலங்களுக்கான நிதித் தன்னாட்சியை பாதிக்கும் காரணியாக அமைந்து நிரந்தர

வருவாய் இழப்பையும் ஏற்படுத்தும் என தமிழக அரசு கவலைகொண்டுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமுறை, தமிழ் நாடு உட்பட உற்பத்தி மற்றும் நிகர ஏற்றுமதி செய்யும் மாநிலங்களை மிகவும் பாதிக்கும். சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதாவை இயற்றுவதற்கு முன்பாக, இவ்வரியின் முக்கிய கூறுகளில் ஒருமித்த கருத்தொற்றுமை உருவாக்க மத்திய அரசு முயற்சிக்க வேண்டும் என்பதே இம்மாநில அரசின் நிலைப்பாடாகும்.

## 16. வணிகர் நலன்

### 16.1 வணிகர் நல வாரியம்

#### 16.1.1 செயல்பாடு

வணிகர்களின் நலனுக்காக தமிழ்நாடு வணிகர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வாரியத்தின் தொகுப்பு நிதி அண்மையில் ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டு, அதன் மூலம் பெறப்படும் வட்டி மற்றும் வணிகர்கள் உறுப்பினர்களாக பதிவு பெறும் போது அவர்களால் செலுத்தப்படும் சந்தாத்தொகைக்கு இணையான அரசின் மானியம் ஆகிய தொகைகளைக் கொண்டு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

#### 16.1.2 உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம்

இவ்வரசு உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணமாக ஆண்டுதோறும் ரூ.100/– செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், 2006–ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெறாத,

தொழில் வரி உச்ச வரம்புக்கு கீழே உள்ள சிறு வணிகர்களும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெற்ற உரிய உரிமத்தின் அடிப்படையில் இவ்வாரியத்தில் உறுப்பினர் ஆகவும் வழிவகை செய்துள்ளது.

### 16.1.3 நலத்திட்ட உதவிகள்

தமிழ் நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் குடும்பநல உதவி, மருத்துவ உதவி, கல்வி உதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 16.2 வணிகர்களின் குறை தீர்க்கும் நாள்

மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் மாவட்ட அளவிலான வரி ஆலோசனைக் குழுக்கள் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் வணிகர்களின் முக்கிய குறைகளை அறிவதற்கும், அக்குறைகளை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும், தீர்வு எட்டப்படவும் உறுதுணையாக உள்ளன.

துறை அலுவலர்களுக்கும், வணிகர்களுக்குமிடையே தகவல் பரிமாற்றத்தில் முன்னேற்றம் ஏற்பட 2014–2015–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின் போது வணிகர்களின் குறை தீர்க்கும் நாள் திங்கட்கிழமைதோறும் ஒவ்வொரு வணிக வரி மாவட்ட துணை ஆணையர் மற்றும் கோட்ட இணை ஆணையர் அலுவலகங்களில் கடைபிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் திங்கட்கிழமைதோறும் துணை ஆணையர் மற்றும் இணை ஆணையர் அலுவலகங்களில் வணிகர் குறை தீர்க்கும்

நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இது வணிகர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக உள்ளது.

இணையதளம் மூலமாக குறைகளைப் பதிவு செய்யவும், கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. 2014–2015–ஆம் ஆண்டில் 1980 குறைகள் இணையதளம் மூலமாக பதிவு செய்யப்பட்டு, அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்கள் மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

## 17. மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிக்கான வருவாய் இழப்பீடு

### 17.1. மதிப்புக் கூட்டு வரி இழப்பீடு

மதிப்புக் கூட்டுவரி இழப்பீட்டுத் தொகை ரூ.650.44 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டியுள்ளது. இத்தொகையை விரைவில் வழங்குமாறு மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்ளப்பட்டது.

### 17.2. மத்திய விற்பனை வரி இழப்பீடு

சரக்கு மற்றும் சேவை வரியை அமல்படுத்தும் பொருட்டு 1.4.2007 முதல் மத்திய விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகவும் 1.6.2008 முதல் 2 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. அதனால் ஏற்படும் வருவாய் இழப்பை சரிக்கட்டும் பொருட்டு மத்திய அரசானது பல்வேறு வரி அல்லாத வருவாய் (Non Tax Revenue) முறைகளை நடைமுறைப்படுத்தியும், நேரடியாக இழப்பீடு வழங்கி சரிக்கட்டவும் ஒப்புக் கொண்டுள்ளது.

தமிழக அரசால் 2007–2008 முதல் 2012–2013 வரையிலான காலத்திற்கு மத்திய விற்பனை வரி இழப்பீடாகக் கோரப்பட்ட ரூ.13,227.46 கோடியில் ரூ.7471.38 கோடி மத்திய அரசிடமிருந்து இன்று வரை விடுவிக்கப்படவில்லை. இம்மாநிலத்திற்கு வழங்க வேண்டிய மீதமுள்ள இழப்பீட்டுத் தொகையை விரைவில் விடுவிக்குமாறு மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

## 18. கணினிமயமாக்கல்

### 18.1 துறையின் கணினிமயமாக்கல்

அரசு தகவல் மையத்தின் உதவியுடன் முதலில் வணிகவரித் துறையின் கணினிமயமாக்கல் துவங்கப்பட்டது. பின்னர், வணிகவரித் துறை தனக்கென ஒரு தகவல் மையத்தினை அமைத்து, மாநிலம் முழுவதிலும் இருந்து பெறப்படும் மாதாந்திர நமூனாக்களை இத்தகவல் தொகுப்பு மையத்தில் பதிவு செய்து, அதனை பரிசீலனை செய்து மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை (Management Information System Report) தயார் செய்தது.

வருவாயை பெருக்கும் நோக்கில் துறையால் கள அலுவலகங்களின் கணினிமயமாக்கல் பெருமளவில் தொடங்கப்பட்டது. 2003–ஆம் ஆண்டு சென்னையிலுள்ள மைய சேவையகத்துக்கு (Central Server) தகவல்கள் வழங்குவதற்காக துறை அலுவலகங்களுக்கு கணினிகள் மற்றும் அதனுடனான இணைப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டன.

தற்போது, துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் கணினிகள் மற்றும் பன்செயல் கருவிகள் (Multifunction Devices) உட்பட அச்சு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. துறையின் அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்கள் அந்தந்த அலுவலகங்களுக்கு அருகாமையிலுள்ள தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் (TNSWAN), இருப்பு முனையின் மூலம் 2 Mbps வழித்தடங்களால் இணைக்கப்பட்டு, துறைக்கான பெரியதொரு பெரும்பரப்பு வலையமைப்பு (Wide Area Network) உருவாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மின்னணு வழி சேவைகளை வணிகப் பெருமக்கள் உபயோகப்படுத்திட www.tnvat.gov.in என்ற சொந்த வலைதளத்தினை துறை கொண்டுள்ளது. மேலும் கூடுதலாக, பல்வேறு மென்பொருள் பிரிவுகளை உபயோகப்படுத்துவதற்கும், துறையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பல்வேறு மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை (Management Information System Report) அனைத்து துறை அலுவலர்களும் காண்பதற்கும் ஏதுவாக www.tnct.gov.in என்ற அக இணைய வலைதளத்தினையும் (Intranet) துறை கொண்டுள்ளது.

## 18.2. மின்னணு சேவைகள் (Electronic Services)

### 18.2.1 வணிகர்களுக்கு வழங்கப்படும் மின்னணு சேவைகள் (Electronic Services Provided to Dealers)

தற்போது, வணிகர்களின் பயன்பாட்டிற்காக துறையுடன் தொடர்பு கொள்ள கீழ்க்கண்ட மின்னணு சேவைகள் வழங்கப்படுகின்றன:–

#### 18.2.1.1 வணிகர்களின் பதிவு (Registration of Dealers)

ஒரு புதிய வணிகர் தனது பதிவு எண் பெறுவதற்கான விண்ணப்பத்தினை மின்னணு முறையில் பதிவு செய்யலாம். விண்ணப்பம் வரிவிதிப்பு அலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு, வணிகர்களுக்கு பதிவுத் தபால் மூலம் வரி செலுத்துவோர் அடையாள எண்ணிட்ட (Tax payer Identification Number-TIN) சான்றிதழ் அனுப்பி வைக்கப்படுகிறது.

#### 18.2.1.2 மின்னணு முறையில் நமூனாக்கள் தாக்கல் செய்தல் (e-filing of Returns)

வரி செலுத்தும் அனைத்து வணிகர்களும், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம் 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் 1956 ஆகியவற்றின் கீழ் சமர்ப்பிக்க வேண்டிய மாதாந்திர நமூனாக்களை மின்னணு முறையில் தாக்கல் செய்யும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மார்ச் 2014–இல் மின்னணு முறையில் மாதாந்திர நமூனாக்கள் சமர்ப்பித்த வணிகர்களின் எண்ணிக்கை 3,31,045. இது

மொத்த வரி செலுத்தும் வணிகர்களின் எண்ணிக்கையில் 72 விழுக்காடாகும். மார்ச் 2015–இல் 3,52,761 வணிகர்கள் மின்னணு முறையில் மாதாந்திர நமூனாக்களை சமர்ப்பித்துள்ளனர். இது மொத்த வரி செலுத்தும் வணிகர்களின் எண்ணிக்கையில் 77 விழுக்காடாகும்.

### 18.2.1.3 மின்னணு முறையில் வரி செலுத்துதல் (e-payment of tax)

மின்னணு முறையில் வரி செலுத்தும் வசதி அரசினால் அதற்கென அங்கீகரிக்கப்பட்ட 25 வங்கிகளில், 22 வங்கிகள் மூலம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 3 வங்கிகள் மூலம் வரி செலுத்தும் வசதி நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிப்ரவரி 2014–இல் வழங்கப்பட்ட அறிவிக்கையின்படி, ஓராண்டிற்கான வரி விதிப்பிற்குரிய விற்றுமுதல் ரூ.2 கோடி மற்றும் அதற்கு அதிகம் நிகழ்த்தும் அனைத்து வணிகர்களும் மின்னணு முறையில் மட்டுமே வரி செலுத்த வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மார்ச் 2015–இல், 1,02,629 வணிகர்கள் மின்னணு (இணையதளம்/நேரடி) (Online/Offline) முறையில் ரூ.5,343.70 கோடி செலுத்தியுள்ளனர். இத்தொகை இதே மார்ச் மாத மொத்த வசூலான ரூ.6,775.06 கோடியில் 79 விழுக்காடாகும்.

மின்னணு முறையில் வரி செலுத்தும் வசதி இல்லாத வணிகர்களும் பயன்பெறும் வகையில், மின்னணு முறை சார்ந்து வங்கிகள் மூலம் வரி

வசூலிப்பதற்கென 19 அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. தற்சமயம் இந்த வசதி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் விஜயா வங்கி ஆகிய மூன்று வங்கிகள் மூலம் 2014–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வரி செலுத்தும் முறையை தேர்ந்தெடுப்பவர்கள் தங்களது வரித் தொகைக்கான செலுத்தும் சீட்டினை துறையின் இணையதளம் மூலம் உருவாக்கிக் கொண்டு இம்மாநிலத்திலுள்ள மேற்கண்ட வங்கிகளில் ஏதேனும் ஒரு கிளையில் வரி செலுத்தலாம். இம்முறையில் மார்ச் 2015–ல் ரூ.58.94 கோடி வரித்தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

2015–ஆம் ஆண்டு இறுதிக்குள் மின்னணு முறையில் வரி செலுத்துதல் 100 விழுக்காட்டினை அடைய வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 18.2.1.4 ஏற்றுமதியாளர்கள் வரி திருப்புகை பெறுதல் (Refunds to Exporters)

பூஜ்ய வரி விற்பனையில் உள்ளீட்டு வரி திரும்பக் கோரும் ஏற்றுமதியாளர்களுக்கு, மின்னணு முறை மூலம் படிவம் 'W' விண்ணப்பம் தாக்கல் செய்யும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் அமல்படுத்தப்பட்டபின், தற்போதைய நடைமுறையைக் காட்டிலும் விரைவாக ஏற்றுமதியாளர்களுக்கு வரித் திருப்புகை கிடைக்கிறது. வரித் திருப்புகையின் அவ்வப்போதைய நிலையினை இணையதளத்தின் வாயிலாக அறியும் வசதி உள்ளது. அதனால் வணிகர்கள் அலுவலகத்திற்கு நேரடியாக வர வேண்டிய தேவை மிகவும் குறைக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி விற்பனை விவரங்களை சரிபார்க்க ஏதுவாக அயல்நாட்டு வர்த்தக தலைமை இயக்குனரகத்துடன் (Director General of Foreign Trade) புரிந்துணர்வு ஒப்பந்தம் 23.01.2014 அன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மின்னணு வங்கி பணவரவுச் சான்று (Electronic Bank Realisation Certificate) பெற்று அதனடிப்படையில் ஒப்பு நோக்கப்பட்டு உள்ளீட்டு வரிவரவு திரும்ப வழங்கப்படுகிறது.

### 18.2.1.5 மின்னணு முறையில் வருடாந்திர நமூனாக்களை சமர்ப்பித்தல் (e-filing of Annual Returns)

வணிகர்கள் மின்னணு முறையில் வருடாந்திர நமூனாக்களைச் (Annual Returns) சமர்ப்பிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 2014–15–ல், 2013–14–ஆம் ஆண்டுக்கான வருடாந்திர படிவம் சமர்ப்பிக்க வேண்டிய 1,86,133 வணிகர்களில் 43,977 வணிகர்கள் மின்னணு முறையில் வருடாந்திர படிவம் சமர்ப்பித்துள்ளனர்.

### 18.2.1.6 தகவல்கள் மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம் (Data Retrieval Lab)

தகவல் மீட்பு ஆய்வகத்தை உருவாக்க அரசு ரூ.21.37 இலட்சம் வழங்கி ஆணையிட்டுள்ளது. இவ்வாய்வகம் மேம்பட்ட தகவல் தொழில் நுட்ப மென்பொருட்களின் உதவியால், கடைத் தணிக்கையின் போது, வணிகர்களின் தகவல் சேமிப்பு உபகரணங்களிலிருந்து, வணிகர்கள் தொழில் நுட்ப உதவியுடன் மேற்கொண்டுள்ள வரி ஏய்ப்பு மற்றும்

அதிநவீன தவறுகளை கண்டுபிடிக்க உதவுகிறது. வணிகர்களிடத்திலிருந்து தணிக்கை சமயத்தில் பறிமுதல் செய்யப்பட்ட நிலைவட்டு (Hard-Disk) போன்ற தகவல் சேமிப்பு உபகரணங்களிலிருந்து விவரங்கள் மீட்கப்பட்டு பகுத்தாய்வு செய்யப்படுகிறது. துறை அலுவலர்களுக்கு தகவல் மீட்பு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 18.3 இதர மின்னணு சேவைகள் (Other Online Services)

வணிகப் பெருமக்களுக்காக கீழ்க்கண்ட வசதிகள்/ சேவைகள் www.tnvat.gov.in வலைதளத்தில் செய்து தரப்பட்டுள்ளன.

- சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டவுடன் அறியும் மற்றும் படியிறக்கம் செய்யும் வசதி
- வணிகர் பற்றிய விவரங்கள், செலுத்திய வரி போன்ற விவரங்களை அறிய வணிகர் பேரேடு (Dealer's Ledger) வசதி
- பொருட்களின் அட்டவணை மற்றும் வரிவிகிதம் தெரிந்து கொள்ளும் வசதி
- வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர் மூலம் வணிகர்களின் முழு விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வசதி
- 2014–2015–ஆம் ஆண்டில் இணையதளத்தின் மூலமாக 'C' மற்றும் 'F' படிவங்கள் வழங்கப்பட்டுள்ள விவரங்களை பிற மாநிலத்தில் உள்ள வணிகர்கள் மற்றும் பிற மாநில வணிகவரித் துறையினர் அறிந்து கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 18.4 அக இணைய வலைதளம் (Intranet)

துறை சார்ந்த அலுவலர்கள் www.tnct.gov.in எனும் அக இணையவலைதளத்தின் மூலம் வரிவிதிப்பு வட்டங்கள், சோதனைச் சாவடிகள், செயலாக்கப் பிரிவு, மேல் முறையீட்டு பிரிவுகள் மற்றும் துறையினால் நிர்வகிக்கப்படும் அனைத்து வரிகள் தொடர்பான தங்களுடைய அன்றாடப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், துறையின் அலுவலர்களுக்கு, அக இணைய வலைதளம் (Intranet) மூலம் கீழ்காணும் வசதிகள் வழங்கப்பட்டு வருகிறது:-

- வரிவிதிப்பு வட்டம் முதல் மாநிலம் முழுதும் பல்வேறு சட்டங்களின்கீழ் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் பற்றிய உடனடி அறிக்கைகள்
- துறை அலுவலர்களின் செயல்திறன் குறித்த புள்ளிவிவர அறிக்கைகள்
- துறை வெளியிடும் சட்டம் மற்றும் விதிகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள், படிவங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் தெளிவுரைகள்
- மாதாந்திர நமூனாக்கள் தாக்கல் செய்த/ செய்யாத வணிகர்கள் தொடர்பான அறிக்கை, மாதாந்திர நமூனாக்கள் மீதான தணிக்கைகள், உள்ளீடு மற்றும் வெளியீடு வரிகளின் ஒப்பீடு விவரங்கள் மற்றும் அதன் மீதான மேலாண்மை தகவல் அறிக்கைகள் (MIS Reports)

- வணிகர்கள் தாக்கல் செய்த உள்ளீட்டு வரி வரவு விவரங்களை மின்னணு குறுக்குத் தணிக்கை (Online cross verification) செய்தல்
- மின்னணு முறையில், தவறான உள்ளீட்டு வரி கோரிக்கைகள் மீதான அறிவிப்பு தயார் செய்தல்
- வரிவிதிப்பு வட்டங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளுக்கான மென்பொருள் ஒருங்கிணைக்கப்பட்டு, அதன் மூலம் வரிவிதிப்பு அலுவலர்கள் மாதாந்திர நமூனாக்களில் பெறப்பட்ட விவரங்களை சோதனைச் சாவடியில் பதிவு செய்யப்பட்ட விவரங்களுடன் ஒப்பீடு செய்யும் வசதி
- மின்னஞ்சல் வசதி

மேற்காணும் வசதிகளைப் பயன்படுத்தி வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்களை, வணிகவரித்துறை அலுவலர்கள் எளிதில் இனங்கண்டு, வரி ஏய்ப்பைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகிறது.

## 19. முழுமையான கணினிமயமாக்கல் திட்டம் (Total Solution Project)

### 19.1 நோக்கம்

கடந்த **2012–**ஆம் ஆண்டில் துறையின் முழுமையான கணினிமயமாக்கல் திட்டத்திற்காக ரூ.**230.95** கோடி ஒப்பளிக்கப்பட்டு, ரூ.**179.98** கோடிக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டது. அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளான வழங்கன் (servers), கணிப்பொறிகள், அச்சு இயந்திங்கள் மற்றும் வலையமைப்பு (network) ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக கணினி சார்ந்த மற்றும் கணினி

சாராத இனங்கள் கண்டறியப்பட்டு அதற்காக அரசு ரூ.**6.73** கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

இத்திட்டத்தின் முதன்மையான குறிக்கோள்கள் :-

* வணிகர்களுக்கான சேவையை கீழ்க்காணும் சேவைகள் மூலம் மேம்படுத்துதல்

அ) எங்கிருந்தும், எந்நேரத்திலும் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளும் வசதி

ஆ) குறைந்த கால அளவிலான சேவைகள் மற்றும் துறையுடனான நேரடி தொடர்பு குறைவது

இ) அதிகரிக்கப்பட்ட வழித்தடங்களில் சேவைகள் வழங்குதல்

ஈ) சேவைகள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை

* துறையின் வரி வருவாய் இலக்கினை எய்துவதற்கு உதவும் வழிமுறைகள்

அ) வரி நிர்வாகத்தை மேம்படுத்த கணினி சார்ந்த முடிவெடுக்கும் ஒருங்கிணைப்பு

ஆ) பிற வரி வசூல் செய்யும் அரசுத் துறைகளின் ஒத்துழைப்புடன் வரி வருவாயினை மேம்படுத்துதல் (Greater Government to Government collaboration)

இ) துறையின் நேரத்தை விரயம் செய்யும் மற்றும் மதிப்பு கூடுதல் இல்லாத நடவடிக்கைகளை பெரிதும் குறைப்பதன் மூலம் துறை அலுவலர்களை அதிக வரி வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் முழுக் கவனம் செலுத்த வகை செய்தல்

ஈ) வணிக நுண்ணறிவு சார்ந்த முடிவுகளை மேற்கொள்வதற்கான மேம்படுத்தப்பட்ட மேலாண்மை அறிக்கைகளை உருவாக்கும் திறன்.

**19.2. திட்ட செயலாக்கம்**

இத்திட்டம், இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும். முதல் கட்டமாக, பதிவு, நமூனாக்கள் மற்றும் அத்தியாவசிய படிவங்கள் ஆகிய பிரிவுகள் நடைமுறைப்படுத்தப்படும். இரண்டாவது கட்டத்தில் மீதமுள்ள பிரிவுகள் நடைமுறைப்படுத்தப்படும். அனைத்து கோட்டங்களிலும் முதல் கட்ட பணிகளை விரைவில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனையடுத்து இரண்டாவது கட்ட செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

**19.3 உள்கட்டமைப்பு வசதிகள்**

முழுமையான கணினிமயமாக்கல் திட்டத்தை செம்மையாக செயல்படுத்தும் பொருட்டு, புதிதாக நிறுவப்பட்ட கணிப்பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு சீரான மின்சாரம் வழங்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் ரூ.2.10 கோடி செலவில் 250 KVA மற்றும் 500 KVA உயர் அழுத்த மின்மாற்றிகள் அமைக்கவும் மற்றும் பிற மின் பணிகள் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**20. விருதுகள்**

### 20.1.1 2013–ஆம் ஆண்டு ஸ்காச் சிறந்த ஆளுமை விருது (Skoch Smart Governance Award 2013)

2013–ஆம் ஆண்டிற்கான, சிறந்த முறையில் மின்னனு சேவைகள் வழங்கும் அரசு துறைகளில் ஒன்றாக வணிகவரித் துறை தேர்ந்தெடுக்கப்பட்டு ஸ்காச் சிறந்த ஆளுமை விருது **(Skoch Smart Governance Award 2013)** துறையின் சிறந்த மின் ஆளுமைக்காக வழங்கப்பட்டது.

### 20.1.2 2014–ஆம் ஆண்டுக்கான வலை தள ரத்னா விருது (Web Ratna Award)

உலகளாவிய வலைத்தளத்தை (www) உபயோகித்து தேசிய அளவிற்குட்பட்டு செயல்படுத்தப்படும் மின் ஆளுமை முயற்சிகளுக்கு (e-governance initiatives) வலை தள ரத்னா விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2014–ஆம் ஆண்டுக்கான வலை தள ரத்னா விருது தமிழ் நாடு வணிகவரித்துறைக்கு மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## 21 உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

### 21.1 சென்னை நீங்கலாக பிற இடங்களில் வணிகவரி வரி விதிப்பு வட்டங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

பொதுவாக, தனியார் கட்டடங்கள் அரசுத்துறை அலுவலகத்தின் தேவைக்கேற்ப வசதிகளுடன் இல்லாததால், இக்கட்டடங்களில் இயங்கிவரும் அரசு அலுவலகங்களை நாடி வரும் வணிகர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர். பணியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு கூடுதல் வசதி செய்திடவும் பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கிடவும், சொந்த கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்திற் கொண்டு, **2011–2012**–ஆம் ஆண்டில் ரூ.**23** கோடி செலவில் **39** அலுவலகங்களை உள்ளடக்கிய **16** கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. இவற்றில் திருச்சியில் வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம், சேலம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டட வளாகம், பண்ருட்டி, நன்னிலம், லால்குடி மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் வணிகவரி அலுவலகக் கட்டடங்கள், ஈரோட்டில் வணிகவரி அலுவலக இணைப்புக் கட்டடம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் புழல் தணிக்கைச் சாவடி கட்டடம் ஆகிய அலுவலகக் கட்டடங்களின் பணிகள் நிறைவுற்று, **11.6.2014** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக்காட்சி மூலம் திறந்துவைக்கப்பட்டது.

2012–13–ஆம் ஆண்டில் இராணிப்பேட்டை, விருத்தாசலம், அரியலூர், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அம்பாசமுத்திரம், நாங்குநேரி, திருச்செந்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய 10 இடங்களில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க ரூ.11.18 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. அவற்றில், இராணிப்பேட்டை, விருத்தாசலம், அரூர், அம்பாசமுத்திரம், செஞ்சி, நாங்குநேரி மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்டு 27.7.2015 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டன. மீதமுள்ள கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

வணிகவரித்துறை பணியாளர்கள் மற்றும் வணிகர்களின் தேவையினை கருத்திற்கொண்டு, தற்பொழுது கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள கட்டடங்கள், சாய்தளம் மற்றும் கைப்பிடிகள், பார்வையாளர் பகுதி, போதிய கழிப்பறை வசதிகளோடு மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தீயணைப்பு ஏற்பாடுகள் போன்றவற்றுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 13.5.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டப் பேரவை விதி எண் 110–ன் கீழ் 7 இடங்களில், 9 வணிக வரி அலுவலகங்கள் 2012–ஆம் ஆண்டு தமிழ் நாடு சூரிய மின்சக்திக் கொள்கையின்படி சூரிய மின்சக்திக் கூரைகள் பொருத்தப்பட்டு கட்டப்படும் என

அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, வாள்வச்ச கோஷ்டம், தேவகோட்டை, சிதம்பரம், ஆற்காடு ஆகிய இடங்களில் வணிகவரி அலுவலகக் கட்டடங்களும் கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் வணிகவரி பணியாளர்கள் பயிற்சி நிலையங்களும் கட்டுவதற்கு ரூ.10.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது, ஆற்காடு, தேவகோட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. பிற இடங்களில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 21.2 சென்னையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 07.08.2014 அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டப் பேரவை விதி எண் 110–ன் கீழ் சென்னையிலுள்ள 70 வரிவிதிப்பு வட்டங்கள் மற்றும் அதிக வரிசெலுத்துவோர் பிரிவு ஆகியவற்றிற்கு வட சென்னை மற்றும் தென்சென்னையில் இரண்டு வணிக வரி வளாகங்கள் ரூ.60 கோடி செலவில் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பின் முதல்கட்ட நடவடிக்கையாக தென் சென்னை வெங்கடாபுரம் கிராமம், கிண்டியில் 52 வணிகவரி மற்றும் 4 பதிவுத்துறை அலுவலகங்கள் இயங்க ரூ.51.98 கோடி ரூபாயில் ஒருங்கிணைந்த வளாகம் கட்ட நிலம் வணிகவரித்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் வடசென்னையில் ரூ.25.25 கோடியில் மீதமுள்ள வரிவிதிப்பு வட்டங்களுக்கான ஒருங்கிணைந்த வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**21.3 சென்னை எழிலகத்திலுள்ள வணிகவரி ஆணையர் அலுவலகத்தை நவீனப்படுத்துதல்**

தற்போது, வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை, சேப்பாக்கத்திலுள்ள எழிலகம் கட்டிடத்தில் நான்காவது தளத்தில் 740 சதுர மீட்டர் பரப்பளவில் இயங்கி வருகிறது. முழுமையான கணினி மயமாக்கலுடன் கூடிய கணினி பயன்பாட்டினை செம்மையான முறையில் செயல்படுத்தி, சிறந்த முறையில் பணிபுரிவதற்கு ஏதுவாக வணிகவரி ஆணையர் அலுவலகம் ரூ.1.38 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும் என்று 07.08.2014 அன்று சட்டமன்றத்தில் சட்டப் பேரவை விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**22. வணிகவரி அலுவலகங்களின் எல்லைகளை மறுசீரமைத்தல் (Reorganisation of Assessment Circles)**

**22.1 சென்னையைத் தவிர ஏனைய வணிகவரி கோட்டங்களின் எல்லையை மறுசீரமைத்தல் (Reorganisation of Assessment Circles other than Chennai Divisions)**

2014–ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள நான்கு வணிகவரிக் கோட்டங்களை மறுசீரமைத்து அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி 4 கோட்டங்களைச் சார்ந்த 89 வரிவிதிப்பு வட்டங்கள் 100 வரிவிதிப்பு வட்டங்களாக மறுசீரமைக்கப்பட்டு, 01.08.2014 முதல் ஒவ்வொரு

கோட்டத்திலும் 25 வரிவிதிப்பு வட்டங்கள் வீதம் இயங்கி வருகின்றன.

அதுபோல, இதர கோட்டங்களையும் மறுசீரமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக கூடுதல் ஆணையர் (சுய சீராய்வு) அவர்கள் தலைமையில் இணை ஆணையர், செயலாக்கம்–1, சென்னை, இணை ஆணையர் (நிர்வாகம்), இணை ஆணையர், செயலாக்கம், கோவை, கூடுதல் ஆணையர் (சீராய்வு மனு), இணை ஆணையர், சென்னை (வடக்கு), இணை ஆணையர் (கணிப்பொறி மையம்) ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு துணைக் குழு வணிகவரி ஆணையரால் நியமிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 22.2 மறுசீரமைக்கப்பட்ட வரிவிதிப்பு வட்டங்களுக்கான வசதிகள்

புதிதாக உருவாக்கப்பட்ட / பிரிக்கப்பட்ட சென்னை வரிவிதிப்பு வட்டங்கள் சீராக இயங்குவதற்கு ரூ.29.09 லட்சம் செலவில் அறைக்கலன்கள் வாங்குவதற்கும், மற்றும் தலைமை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 13 கைபேசி சிம் கார்டுகள் வாங்குவதற்கும் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## 23 சோதனைச்சாவடிகள்

### 23.1 சோதனைச் சாவடியில் விரைவு வழி அனுமதி முறை (Fast Track Clearance System at the Check-post)

இச்சேவையின் வாயிலாக வணிகர்கள் தங்கள் வாகனங்களில் கொண்டு செல்லும் பொருட்கள் பற்றிய விவரங்களை துறைக்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, அதன் மூலம் பெறப்படும் ஒப்புகை சீட்டுடன் தங்கள் சரக்குகளை வாகனங்களில் கொண்டு செல்லலாம். வணிகர்கள் கொண்டுவரும் ஒப்புகை சீட்டில் உள்ள விவரங்கள் சோதனைச் சாவடி அலுவலர்களால் கணினி மூலம் சரிபார்க்கப்பட்டு, உரிய பதிவுகள் செய்யப்பட்டு, வாகனம் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படும். இச்சேவையினால் வாகனங்கள் சோதனைச் சாவடியில் விரைவு அனுமதி பெறுவதால் நேரம் சேமிக்கப்படுவதுடன், சோதனைச் சாவடிகளில் ஏற்படும் நெரிசலை குறைக்கவும், தவறுகள் ஏற்படா வண்ணம் இருக்கவும் உதவுகிறது.

### 23.2 சோதனைச் சாவடி கட்டடங்கள்

பணியாளர் பற்றாக்குறை, இணையதளங்களில் ஏற்படும் தடங்கல்கள், மின்தடை, அமைவிடங்கள் சரியாக அமையாமை, இடம் பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களால் துறையிலுள்ள, 28 சோதனைச் சாவடிகள் மற்றும் 8 சோதனை முனையங்கள் இயங்குவதில் மிகுந்த சிரமம் இருந்தது. இந்த இடர்பாடுகளைக் களையவும், சோதனைச் சாவடி மற்றும் சோதனை முனையங்களை நவீனப்படுத்தவும், 2012–இல் ரூ.33.36 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இத்தொகையானது, நிலம்

கையகப்படுத்துதல், புதிய கட்டடங்கள் கட்டுதல், கட்டடங்களைப் புதுப்பித்தல், வாகனங்கள் வாங்குதல், ஜென்செட்டுகள் வாங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரையில் ரூ.2.29 கோடி செலவில் 8 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2 கட்டடங்களின் (மீனாட்சிபுரம், கோயம்புத்தூர் மாவட்டம், பன்னாரி, ஈரோடு மாவட்டம்) கட்டுமானப்பணிகள் ரூ.58.40 லட்சம் செலவில் முடிவுறும் தருவாயில் உள்ளன. இரண்டு கட்டடங்கள் கட்டுவதற்கான நிலம் தற்போது கையகப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் அங்கு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

தற்பொழுது, காட்பாடி, வேலூர் செயலாக்கக் கோட்டத்திற்கு உட்பட்ட பட்டானூர், மதுரை செயலாக்கக் கோட்டத்திற்கு உட்பட்ட லோயர்–கேம்ப், போடிமெட்டு மற்றும் திருச்சி செயலாக்கக் கோட்டத்திற்கு உட்பட்ட தரங்கம்பாடி ஆகிய சோதனைச் சாவடிகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கான நிலம் கண்டறியப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டம் மேலவாஞ்சூர், விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் கே.ஜி. சாவடி (வெளிவழி) ஆகிய இடங்களில் வணிகவரி தணிக்கைச் சாவடிக் கட்டடங்கள் 27.7.2015 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

## 23.3 சோதனைச் சாவடிகளை நவீனமயமாக்குதல்

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் பெத்திக்குப்பம் என்னும் இடத்தில் ரூ.120 கோடி செலவில் ஒரு ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி போக்குவரத்துத் துறையால் தற்போது கட்டப்பட்டு வருகிறது. இது, 2015–ஆம் ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கட்டடம் கட்டி முடித்தவுடன் புழல் உள் மற்றும் வெளி வழி சோதனைச் சாவடிகள் இந்த ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியிலிருந்து செயல்படத் துவங்கும்.

07.08.2014 அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டப் பேரவை விதி எண் 110–ன் கீழ் ரூ.120 கோடி செலவில் ஒரு ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி ஒசூரில் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டது. அதற்கான நிலம் கையகப்படுத்துதல், நில மாற்றம் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## 23.4 நகர்த்திச் செல்லக் கூடிய சிற்றறை அமைத்தல் (Installation of portable cabins)

தரைவழி / இரயில்வழி / வான்வழி / கடல்வழி ஆகியவற்றின் மூலமாக வரும் பொருட்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், முழுமையான கணினிமயமாக்கலை அமல்படுத்தவும், திருத்தணி, கே.ஜி.சாவடி (உள்), ஒசூர் (உள்), தொப்பூர் (உள்), பட்டானூர், சென்னையிலுள்ள எழும்பூர் சரக்குகள் மாற்று தளம் (Egmore Goods yard), தூத்துக்குடி துறைமுகம், ஊத்துக்கோட்டை மற்றும் அரக்கோணம் அருகில் மேல்பாக்கத்தில் உள்ள இரயில்வே தளம் (Melpakkam

Railway Container Yard) போன்ற சில சோதனைச் சாவடிகள் / சோதனை முனையங்களில் நகர்த்திச் செல்லக் கூடிய சிற்றறைகள் **(portable cabins)** ரூ.**61.96** இலட்சம் செலவில் வழங்கப்பட்டு துணைப் பணிகள் ரூ.**12.90** லட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 24 வாகனங்கள் மற்றும் புவி இருப்பிட அமைப்பு அறிதல் (Vehicles and GPS Tracking)

### 24. 1 வாகனங்கள் வாங்குதல்

வணிகவரித் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட **234** வாகனங்களில் **202** வாகனங்கள் உபயோகத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளன. பழுதடைந்த நிலையிலுள்ள **32** வாகனங்களுக்கு உபயோகமற்றதென சான்றிதழ் பெற்று அவற்றிற்குப் பதில் புதிய வாகனங்கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2012–2013**–ஆம் ஆண்டில் ரூ.**86.38** லட்சம் செலவில் **16** வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

**2014–2015**–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது **22** வாகனங்கள் வாங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அவற்றில் **9** வாகனங்களுக்கு ரூ.**49.92** லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள **13** வாகனங்கள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 24.2 செயலாக்கப் பிரிவு வாகனங்களில் புவி இருப்பிட அமைப்பு அறியும் கருவிகள் நிறுவுதல் (Installation of GPS tracking System in Enforcment vehicles)

2014–2015–ஆம் ஆண்டில் சுற்றும் படைகளுடன் கூடிய செயலாக்கப்பிரிவு வாகனங்களின் இருப்பிடத்தை அறிந்து கொள்ள ஏதுவாக பகுதி – II திட்டத்தின் கீழ் ரூ.21.88 லட்சம் செலவில் புவி இருப்பிட அமைப்பு **(GPS)** அறியும் கருவிகள் நிறுவ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 25. 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம்

அரசு அமைப்புகள் வெளிப்படையாக இயங்குவதற்காக, 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. வணிகப் பெருமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள வணிகவரித்துறை அதன் செயல்பாடுகள் எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. இக்குறிக்கோளை எய்திடும் நோக்கில், 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து, உரிய தகவல்களை உரிய காலக்கெடுவிற்குள் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அளித்து வருகிறது.

**எம்.சி.சம்பத்**
**வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**